# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

## கொழும்பு

************

**<u>ஊடக அறிக்கை</u>**

## <u>புலம்பெயர்ந்த சிறுவர்களுக்கான 2021-22 கல்வி ஆண்டுக்குரிய புலமைப்பரிசில் திட்டம்</u>

புலம்பெயர்ந்த சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தினை [SPDC] இந்திய அரசாங்கம் 2006-07 ஆம் ஆண்டுகளிலிருந்து நடைமுறைப்படுத்திவருகிறது . இந்த திட்டத்தின்கீழ் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள் (PIOs) மற்றும் இந்தியாவில் வதியாத இந்தியர்கள்(NRIs), இந்திய பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள உதவிகள் வழங்கப்படுகின்றன . தொழில்சார்ந்த மற்றும் தொழில்முறைசாராத (மருத்துவம்/துணைமருத்துவம் தவிர்ந்த ) கற்கைநெறிகளுக்கான நிதி உதவியினை அவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் . இருந்தபோதிலும் புதுமுக (முதலாம் வருடம் ) மாணவர்கள் மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

2. மேலேகூறப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக இலங்கையில் உள்ள மாணவர்கள் இந்தபுலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள்.

3. இந்த புலமைப்பரிசில் தொடர்பான மேலதிக தகவல்களை http://www.spdcindia.gov.in/login/guideline.php. என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் . தகுதியுடைய விண்ணப்பதாரிகள் 2021 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேலே தரப்பட்ட தளம் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

************

கொழும்பு

**09 ஒக்டோபர் 2021**